
www.padippakam.com

# புதிய தடம்

5

ஜூன் - ஜூலை - 99



தனிச்சுற்று இதழ

நன்கொடை ரூ 4.00

படிப்பகம்

# பயிலுவோம் ! பயிற்றுவிப்போம்! தலைமைக்குயர்த்துவோம்!

www.padippakam.com

**தலையங்கம் :**

**பண்ணையார்களின் அதிகாரத்திலே விசுவாசிகளுக்கே தலைமைப்பீடம் ! எதிர்ப்பாளர்களுக்கு பலிபீடம் !**

*அன்பார்ந்த தோழர்களே !*

தோற்றத்தில் முரணான பல நிகழ்வுகளுக்கு மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

1. **எல்லையில் யுத்தம்.**
2. **பாராளுமன்றத் தேர்தல்**
3. **உலக கோப்பை - கிரிக்கெட் போட்டி.**

இவை எல்லாம் வேறுவேறாகத் தெரிந்தாலும் எல்லாம்பின்னிப் பிணைந்தவைகளே.

தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்ட நிலையில், காஷ்மீர் எல்லையில் திடீரெனத் துவக்கப்பட்டுள்ள ராணுவத்தாக்குதலுக்கும், தீவிரவாதிகள் ஊடுருவல் என்ற பீதியூட்டலுக்கும் பி.ஜே.பி.யின் பதவிவெறிக்கும் தொடர்பில்லை என்று கூறமுடியாது.

தமிழகத்தில் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு பெரிய ஆபத்திலிருந்து முக்கிய நகரங்கள் தீவிரவாதிகளிடமிருந்து காக்கப்பட்டதாக தமிழக அரசு கூறியதை புதியதமிழகம் கிருஷ்ணசாமி, த.மா.க. பீட்டர் அல்போன்ஸ் 'தேர்தல் நாடகம் இது' என சந்தேகப்பட்டுள்ளதை நாம் ஒதுக்கிவிட முடியாது.

கலைக்கப்பட்டு காபந்து அரசாக செயல்படும் பி.ஜே.பி. அரசு வேகமாக ராக்கெட் ஏவுவதும், திடீர் என பாகிஸ்தான் தீவிரவாதிகளை காரணம் காட்டி கார்கில் பகுதியில் விமானத்தாக்குதலில் ஈடுபடுவதும் உள்நோக்கம் கொண்டதாகவே இருக்கிறது.

ஏனென்றால் பாராளுமன்றத் தேர்தல் அறிவிப்பு வெளியானவுடனேயே பி.ஜே.பி. இந்த முறை தேர்தலில் தங்களது கோசம் 'தேச நலன், அந்நியர் பிரதமர் ஆகலாமா?' என்பதே என்று சொன்னதையும், தேசிய சனநாயக கூட்டணி என்று தங்களது அணிக்கு பெயர்



படிப்பகம்

www.padippakam.com

கூட்டியுள்ளதையும், இராமனை கைகழுவி விட்டிருப்பதையும் இதனுடன் இணைத்துப் பார்க்கவேண்டும்.

தங்களது எதிர் அணியினர் மதவாத பீதியூட்டி மக்களிடம் ஓட்டு கேட்கும் போது அதற்கு நிகரான பீதியூட்டலுக்கு அந்நிய ஊடுருவல், தேசநல்னுக்கு ஆபத்து என்ற விசயங்களே சரியான போட்டியாக அமையும் என பி.ஜே.பி. தேர்வுசெய்துள்ளது. இதற்கு, சமகாலத்தில் கிக்கெட் போட்டி மக்கள் சிந்தனையில் ஏற்படுத்திவரும் இந்தியா வெற்றி பெறவேண்டும் என்ற ஆசை எளிதாக பி.ஜே.பி. யின் இந்திய நலன் என்ற கோசத்துடன் ஒன்றிணைந்து விடுகிறது.

தேசநலனை பி.ஜே.பி. முன்னிறுத்தியவுடன் எந்த எதிர்க்கட்சியும் வாய்திறக்கமுடியவில்லை. சோனியாவே இராணுவ தாக்குதலுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டிய நிலை.

வாய்திறந்த ஜெயலலிதாவும் ஜார்ஜ்பெர்னாண்டஸ் பதவி விலகவேண்டும் என்றுதான் சொல்லமுடிகிறது. ஜெயலலிதாவின் புதுப் பாதந்தாங்கி நல்லகண்ணு அதனை வழி மொழிகிறார்.

அரசியல் கட்சிகள் பதவியை கைப்பற்றுவதற்கு தேர்தலுக்கு ஒரு கோசத்தைக் கண்டுபிடிப்பது வழக்கமானாலும் இந்த முறை பி.ஜே.பி. எடுத்த கோசம்(தந்திரம்) சக பதவி வெறியர்களையே திகைக்க வைத்துவிட்டது.

திகைக்காமல் என்ன செய்வார்கள்? தலைக்குமேல் 'தேசவிரோதி' என்ற முத்திரைக் கத்தி தொங்கிக் கொண்டிருக்கும் போது யார் எதிர்ப்பு தெரிவிக்கமுடியும்?

ஈழப்பிரச்சனையில் சூடுகண்ட கருணாநிதி உள்ள நிலமையை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார் வாஜ்பேயியின் தியாக வரலாறு பற்றியும், தேசநலன் பற்றியும் பேச ஆரம்பித்துவிட்டார்.

கடந்த தேர்தலில், மதவாதி, ஊழலுக்கு துணைபோகும் சந்தர்ப்பவாதி என்றெல்லாம் பேசிய வாய் இன்று தேசத்தின் காவலர், தியாகி என்றெல்லாம் பேசி தன் பதவியை காத்துக் கொள்ள விசுவாசத்தைக் காட்டுகிறது.

மாநில அரசுகள் நிலைக்க வேண்டுமானால் மத்திய அரசின் விசுவாசியாக இருக்கவேண்டியிருக்கிறது.

ஒரு கட்சியில் பதவிக்கு வர தலைவருக்கு விசுவாசியாக இருக்கவேண்டும். இப்படி கங்காணிகளுக்கு சலுகை வழங்கும் பண்ணையார் குணத்துடன் கட்சியும், அரசு நிர்வாகமும், ஆட்சியும் பிரதமருக்கு முதல்வர் விசுவாசி, கலெக்டருக்கு தாசில்தார் விசுவாசி, மாவட்டத்திற்கு வட்டம் விசுவாசி,

படிப்பகம்

சோமனுக்கு கவுன்சிலா, கட்சிக்கு தொண்டன . . . . . .

www.padippakam.com

இதன் எதிர்புறம் தங்களது எதிர்ப்பாளர்களை, பதவிப் போட்டியாளர்களை எப்படியும் தொலைத்துக்கட்டி விடுவதில் ஆட்சியாளர்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள்.

தி.மு.க. விலிருந்து வை.கோ. வும், பா.ம.க. விலிருந்து தீரனும், காங்கிரஸிலிருந்து பவாரும் வெளியேற்றப்படுவதில் பதவிப்போட்டி இல்லை என்று சொல்ல முடியுமா?

ஜெயலலிதா கும்பல் விசாரணைக்கு உட்படுத்தபடுவதில், லல்லு கும்பல் விசாரிக்கப்படுவதில் ஊழலை ஒழிக்கும் உயர்ந்த லட்சியம் இருக்கிறது என்று யாரால் சொல்லமுடியும்?

வேலை நிறுத்ததில் ஈடுபடும் தொழிலாளிகள் பணிநீக்கம் செய்யப்படுவதிலும், தண்ணியில்லாக்காட்டிற்கு மாற்றப்படுவதிலும் எதிர்ப்பாளர்களை அழித்துவிடும் பண்ணையார்த்தனம் இல்லை என சொல்ல முடியுமா?

இதனை எல்லாம் கணக்கிடாமல் திரிபுவாதிகள் எதிரிகளுக்கு முன்பாக நிராயுதபாணியாக மக்களை நிறுத்தி தாக்குதலுக்கு உள்ளாக்கி பயப்படுத்தி எதிர்ப்புணர்வையே காயடிக்கிறார்கள்.

இந்த காயடிப்பிற்கு எதிராக நிலவும் சூழலில் சனநாயகம் இல்லை என்பதை உணர்வதும், உணர்த்துவதுமே இன்றைய தேவை.

தோழமையுடன்,
புதிய தடம்
சமூக விஞ்ஞானப் பயிலகம்
தமிழ்நாடு.

*வாசகர்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன .*

***ரூ50/- நன்கொடை சந்தா செலுத்துபவர்களுக்கு இதழ் தொடர்ந்து கிடைக்கும்***

**நூல் விமர்சனம் பகுதிக்கு 1 பிரதி அனுப்ப வேண்டும்**

*தொடர்புக்கு*

**மேகவண்ணன் ,புதிய தடம்**

*28, B, லெட்சுமண தீர்த்தம் தெரு,*
*இராமேஸ்வரம் - 623 526.*


படிப்பகம்

## மாறுபடும் தேவைகள்

குப்பனையும் சுப்பனையும் மயக்க
சாராயமும் சினிமாவும் போதும்
ஆனால்
ரமேஷையும், சுரேசையும் மயக்க
கோகோ கோலாவும் இன்டர்
நெட்டும்
வேணும்.

மருங்கன்

## நவபிரபு

தேரு போய் மாருதி காரு
குதிரை போய் ஹீரோ ஹோண்டா
ஓலை போய் டெலிபோன், செல்போன்
சோம பானம் சுராபானமாய்
பிராந்தியும் விஸ்கியும்
முடைநாற்றம் மறைக்க
பார்க் அவென்யு சென்ட்
காவலுக்கும் ஏவலுக்கும்
படித்த, படிக்காத அடிமைகள்
ராஜா பதவியைப் பறித்து
மந்திரிகளுக்குக் கொடுத்துவிட்டு
எல்லோரும்
குறு நில மன்னராகியாச்சு
ஆனாலும்
கப்பம் வசூலிக்கும் பேரரசன்
வெள்ளையன் என்பது
பெருமையே !

மருங்கன்

## உடைபடும் புனிதங்கள்

பகலிலும் கண்களுக்கு
இருட்டை வழங்கிய
இமைகள் பிய்த்தெரியப்படுகின்றன.
ஒளிக்கூர்மை
குத்திக் கிழிக்கின்றன
விழித்திரையை
ஒளியின் நிறம் பற்றிய

மயக்கங்கள்

www.padippakam.com

இனிச்சாத்தியமில்லை
அவல ஓலங்களால்
கிழித்தெரியப்படுகின்றன
செவிப்பறைகள்.
மழலை கீதமும் இனி
நாராசமாய் ஒலிக்கும்
வீடுதரும் பாதுகாப்பு
இனிச்சாத்தியமில்லை
அழுகிப்போனபின் நொருங்கிப்போகும்
நத்தைக் கூடுகளாய்
பாசப்பொய்மை உறுவப்பட்ட
குடும்பச் சுவர்கள்
தகர்ந்து வீழ்கின்றன.
தரதரவென இழுத்து வந்து
வீதியில் நிறுத்துகிறது
வாழ்க்கை.
இடிபடும் கோயிலுக்குள்ளிருந்து
இறைவன் ஓடி ஒளிவது போல
இல்லறம் பற்றிய போலித்தனங்கள்
இல்லா தொழிந்தன.
இப்போது
நட்சத்திரங்களுக்குக் கீழ்
இரவுகளும்
ஒரு சூரியனுக்குக் கீழ்
பகல்களும்
உனக்கும் எனக்கும்
பொதுவாய்ப் போயின
சேர்ந்து போராடலாம்
வா!

*நரசிம்மம்*

இதழ் தலையங்கம் எள்ளல் தொட எழுதியுள்ளது கண்டு மகிழ்ந்தேன். பெண் என்றால் கவிதை மிகவும் அருமை. சமாதானம் பற்றிய ஒரு அநீதிக் கதை - மிகச்சிறப்பான தேர்வு - நெருக்கப்படுகின்ற - இதயம் தான், சூழலில் சுடுகின்ற நெஞ்சம் தான் கனல் வரிகளை ஆக்கும். அதற்கு இந்தக் கவிதை உதாரணம்தான்.

அலையோர மயானங்கள் சிறுகதை என்னை இக்கடிதம் எழுதத் தூண்டியது. பாட்டாளியின் சமீபத்திய விலாசம் தரவும். இந்தக்கதையில் எப்படி இறால் பண்ணை - சிறு மீன்பிடிப்பாளர்களை - கொலைக்குக் காரணமானதை அதுவும் உடலம் தெரியாமல் ஆக்கியது என்பதை மிகச்சரியாக, கவித்துவமாக ஆக்கியிருந்ததால் இக்கதை மிகச் சிறப்பான வட்டார வழக்குக் கதைகளுள் ஒன்றாகத் தேர்வாகும். அவருக்கு என் வாழ்த்துக்கள். மிகத்துடிப்பாக ஈர்ப்புடன் அக்கதையை ஆக்கியுள்ளார்.

***- பொள்ளாச்சி நசன்***

புதிய தடம் கிடைத்தது. போலி கம்யூனிஸ்டுகளைத் தோலுரிக்கும் செய்திகள், படைப்புகள் நிறைய, உரைக்க வேண்டுமே ?

ஆனால் இவ்வகையான உள்ளடக்கம் பத்திரிக்கையைத் தனிமைப்படுத்தும் வாய்ப்பும் உண்டு. அதுமட்டுமே நம் வேலையுமல்ல. நரசிம்மம் கவிதை புதிய கோணத்தில் சிந்திக்கிறது. எனினும் நீளம், ஆழத்தைச் சிதைத்து விட்டது.

மதங்கள் கோரும் நிலப்பிரபுத்துவ பிற்போக்குத் தனங்களுக்கு மாற்றாக ஏகாதிபத்திய சீரழிவுக் கலாசாரங்களை முன்னிருத்தும் போக்கின் ஒரு வெளிப்பாடே ஃபயர் திரைப்படம். இரண்டுமே மார்க்சிய விரோதப் போக்குதான். மாறாக இயக்குனரின் குரலை அங்கீகரிப்பது போன்ற தொனி விமர்சனத்தில் வெளிப்படுகிறது.

சிவசேகரம் கவிதை நல்ல பதிவு.

பாட்டாளியின் சிறுகதை அவரளவில் புதிய முயற்சி. அதற்காக வரவேற்கலாம்.

ஆனால் கவிஞன் கதை எழுதுகிற 'நடை'யில் இச்சிறுகதையும், இது பலவீனம். இறால் பண்ணைகளினால் அவதியுறும் மக்களின் 'சோகத்தை' காட்டுவதோடு சரி. வாசகன் இந்த வாழ்க்கை அவலத்தின் மீது பரிதாபப்படவேண்டும். அவ்வளவே! அவ்வளவுதானா?

www.padippakam.com
உண்மையில் இறால் பண்ணைகள் பல ஏக்கர் விவசாய நிலங்களை அரித்தது பற்றியோ, அதற்கெதிராக நடந்த போராட்டங்களைப் பற்றியோ, கடல்பகுதிகளில் நிலவும் ஏகாதிபத்திய விஞ்ஞான ஆக்கிரமிப்புகள் பற்றியோ.

...

தோழர் சிறுகதைகளின் உள்ளடக்கம் விரிந்திருக்கிறது. ஏகமாய் . . .

நன்றி.

*- தீபன். ஆற்காடு.*

ராமேஸ்வரத்திலிருந்து வெளிவரும் சிற்றிதழ்களில் புதிய தடம் ஒரு சமூக நோக்குடனும் கலை இலக்கியத்தை ஒரு போர்க்கருவியாகப் பயன்படுத்தும் முயற்சிக்கும் வாழ்த்துக்கள்.

தங்கள் இதழ் 4-ல் அமைந்த "ஜாக்கிரதை, இது ஜனநாயகநாடு" என்ற தலையங்கம் இந்தியாவில் நடக்கும் மிக மோசமான, அராஜகம், வன்முறை, பிற்போக்குத்தனங்களை எதிர்மறையாக சுட்டிக்கட்டியுள்ளது. சமூகத்தில் நடக்கும் வன்முறைகளைக் கண்டு கோபப்பட்டு கொதித்தெழ வேண்டிய விசயத்தை எதிர்மறையாகக் கூறி நக்கல் செய்து, திருப்தி அடைவது கலைஞன் அரசியல் ரீதியாக வளர்வதை திருப்பிவிடும். உங்கள் கோபத்தையும் சமூகப்பார்வையையும் அப்படியே இதழில் பதிவு செய்யுங்கள். உங்கள் கோபத்தின் நியாயம் கண்ட வாசகர்கள் சரியான புரிதலுக்குச் செல்வார்கள்.

எதிர்மறை பேச்சு, அணுகுமுறைகள் சரியானதாகாது.

மற்றும் இதழில் இளைய முருகனின் கவிதை சிவப்புச்சாயத்தில் இந்திய மக்களின் வாழ்வைச் சீரழிக்கும் போலிகளுக்கு எச்சரிக்கை விடுகிறது. நல்ல முயற்சி. இன்னும் கவிதையாளர், இவர்கள் யார்? என்று ஸ்தூலமாக அம்பலப்படுத்தியிருக்கலாம்.

இதழில் வெளிவந்துள்ள மேகவண்ணனின் கவிதையின் உள்ளடக்கம் நேர்த்தியானதாக இல்லை. இந்தியச் சமூகத்தின் வாழ்நிலையிலுள்ள இரண்டு பிரிவினரை வல்லரசுடன் ஒப்பிடுவது சரியானதாகாது. மேலும் வல்லரசின் உற்பத்தி பற்றிய சரியான பார்வை கவிதையில் பதிவாகவில்லை. வார்த்தைகளை நேர்த்தியாக அமைக்கும் முயற்சியில் கவிஞர் மூழ்கியிருக்கிறார். இதை முறியடித்து உள்ளடக்கத்தை சரியானதாகத் தாருங்கள். கவிஞர் நரசிம்மத்தின் 'பெண்ணென்றால். . .' கவிதை நீள் கவிதையாகவும், வெகுகாலமாக ஒடுக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் பெண்களைப் பற்றியதாகவும்

படிப்பகம்

www.padippakam.com

அமைக்கப்பட்டிருந்தது. நரசிம்மத்தின் கவிதையில் வரும் சொல்லாடலைப் பார்க்கும்போது வாழுகின்ற சமூகத்திலிருந்து முரண்பட்ட சக்தியாகத் தெரிகின்றார். அப்படி முரண்படும்போதே வளர்ச்சியும் பெறுகிறார். அவ்வளர்ச்சி போக்கை இந்தியாவில் வாழும் அனைத்துப் பெண்களுக்கும் பொதுவாக்குகிறார். இதெப்படி சரியானதாகும்?

நரசிம்மம் கவிதையில் அறிமுகப்படுத்தி கேள்வி கேட்கும் பெண்கள் எந்த வாழ்நிலையில்? எந்தப்பிரிவில் இந்தியாவில் வாழ்கிறார்கள்? என்ற கேள்வி எழுகிறது.

கவிஞரே! வாழ்நிலைகளில் தாங்கள் சந்திக்கும் பெண்களின் இன்றைய நிலையை அப்படியே பதிவு செய்யுங்கள். மேலும் இருப்பிலிருந்து அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கி சிந்திக்கும் கவிதை தாருங்கள்.

சிவசேகரத்தின் கவிதை அருமையாக இருந்தது. கலை இலக்கியத்தை போர்க்கருவியாக மாற்றும் உங்கள் போக்குக்கு எனது வாழ்த்துக்கள்.

—ஆனந்தன். ராமநாதபுரம்.

தோழமை நெஞ்சத்தீர் ! வணக்கம் !!

புதிய தடம் இதழ்(4) தமிழக மக்கள் பொருளியல் உரிமைக்கழகத்தின் பொருளியல் உரிமை இதழின் பொறுப்பாசிரியர்பறம்பை அறிவன் மூலம் பெற்றேன்.

மட்டைப்பந்து (கிரிக்கெட்) விளையாட்டு உழைப்பிலிருந்து விலகியது. எங்கோ சோம்பேரிகள், மக்கள் பகைவர்கள் கக்கியதை, நக்கி வருவது அருவருப்பாக உள்ளது.

இது பன்னாட்டு மையம் நலிந்த நாடுகள் மீது பண்டங்களைத் திணிப்பது போன்றதாகும். ஆட்டக்காரர்களும், அவர்களைத் தாங்கும் வணிக நிறுவனங்களும் ஏற்பாடு செய்துவரும் மட்டைப்பந்து நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி முன் மண்டியிட்டு நேரத்தை வீணாக்குகின்றனர். இதைப் புதிய தடம் அலசலுக்கு உள்ளாக்கி இருப்பது மார்க்சியத்தை தெளிவுபடுத்தியுள்ளது. தமிழில் வழிபாடு பற்றிய கட்டுரைகளில் கட்டுரையாளர் மெய்ம (சித்தாந்த) சிறைக்குள் அடைபட்டிருக்கிறார்.

இந்தி மொழியால் தமிழ் போன்ற பிற தேசிய மொழிகள் ஒடுக்கப்படுகிறதா? இல்லையா?

சமஸ்கிருதத்தோடு தமிழை ஒப்பிடுவது (இருப்பதைக் கொண்டு

படிப்பகம்

www.padippakam.com

செம்மைப்படுத்தப்பட்ட மொழி) எப்படி சரியாகும்? நிலக்கிழார்களின் மொழி தமிழ் என்று கூறுவது எந்த அடிப்படையில்?

'மக்கள் தமிழில்' எழுதப்படவேண்டும் என கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சொற்களை சிதைத்து பிழைபட எழுதுவதுதான் மக்கள் தமிழா? மக்கள் தமிழ் என்று தங்களின் கருத்துதான் என்ன? மக்களிடம் இருந்து சமஸ்கிருதம் வழக்கில் ஒழிந்துள்ளது. ஏற்கனவே தமிழ் மக்கள் மொழியாகத்தான் இருந்து வந்துள்ளது. அதானால் தான் இன்றும் கிரேக்கம், லத்தீன் போன்று இல்லாது உயிரோடு உள்ளது. காலத்திற்கேற்ப சொற்கள் தோன்றும் - மறையும். இந்த அடிப்படையில் தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தம் அவை தோன்றிய காலத்தில் அக்கால மக்களுக்குப் புரிந்திருக்கும். இல்லை என்றால் அவையும் அழிந்திருக்கும்.

சமயம் - மதம் என்பதன் தோற்ற காலத்தை நாம் பார்க்கவேண்டும். சமூகம் தேக்கமடைந்தபோது மக்களின் ஏக்கப் பெருமூச்சாக வெளிப்பட்டுள்ளது.

வேலிக்குப் போட்ட முள் வினையாக (உதிர்ந்து சிதரி கால்களில் குத்துவது போல) வந்தது போல் மதம் திரிந்தது. ஆகவே, தமிழில் வழிபாடு என்பது பற்றிய கட்டுரையாளரின் பார்வை ஒரு தேசிய இனத்தையே கொச்சைப்படுத்துவது, மொழி பற்றிய பார்வையை கட்டுரையாளர் விரிவுபடுத்தினால் தான் படைப்பு தரமானதாக இருக்க முடியும். கருத்து வைப்பில் முரண்பாடு இருந்தால் சுட்டிக்காட்டுங்கள்.

**தோழமையுள்ள. உ. அமரன்**
***வாழ்வாங்கி.***


*வெளிவந்து விட்டது*

**கவிஞர். பாட்டாளியின்**

**மண் மணம் கமழும் கவிதைகளின் ( முதல் ) தொகுப்பு**

**தூரத்துப் பனையில் ...**

பக்கங்கள் 84 விலை ரூ 21

*கிடைக்கும் இடம்*

**பாட்டாளி**

54. திருவள்ளுவர் தெரு,
RMS காலனி வடக்கு, எடமலைப்பட்டி புதூர், திருச்சி - 620 012
வெளியீடு : வில்பா லிட்டரேசர் (பி) லிட்


படிப்பகம்

www.padippakam.com

- குமரன்தாஸ்

# திரிபுவாதப் போராட்டங்களுக்குள் ஒளிந்திருக்கும் இந்துத்துவம்

எல்லாச் சொல்லாடல்களும் இந்தியாவில் கறைபடுத்தப்படுவது இயல்பு. புகழ்பெற்ற 'சோசலிசம்' என்ற சொல் உலகமேல்லாம் ஓர் பொருளில் வழங்கப்பட்ட போது இந்தியாவில் மட்டும் சிதைக்கப்பட்டும் சீரழிக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டது.

அப்புகழ் முழுமையும் இந்தியப் பொதுவுடமைவாதிகளால் முற்போக்காளராக காணப்பட்ட திரு. நேருவையே சாரும். இதுபோல பல சொல்லாடல்களை நாம் காணலாம்.

உதாரணமாகக் கூறுவது என்றால் வரும் தேர்தலை முன்னிட்டு பாரதீய சனதா ஏற்படுத்தியுள்ள **'தேசிய சனநாயக கூட்டணி'** யையும், இடதுசாரிகள் ( அது என்ன இடதுசாரிகள்? ) மேற்கொண்டுள்ள **'மதசார்பற்ற முன்னணி'** இரண்டையும் கூறலாம்.

மதசார்பின்மை (Secularism) என்பதற்கு எந்தமதத்தையும் சாராமை அல்லது மத எதிர்ப்பு என்பதே பொருள் ஆனால் இங்கு மதச்சார்பின்மை என்பதற்கு 'எல்லா மதத்தையும் அங்கீகரித்த' என்று பொருள் கொண்டு மத ஒற்றுமை, மதநல்லிணக்கம் என்று பேசுகின்றனர்.

அதுபோலவே 'தேசிய சனநாயகம்' என்றாலே நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம் இரண்டையும் எதிர்த்து தேசிய முதலாளித்துவம் முன்வைக்கும் முதலாளித்துவ சனநாயகத்தை குறிக்கும் சொல்லாடலாகும் அது. ஆனால் இங்கு அப்பட்டமான இந்திய (இந்துத்துவ) சனாதனத்தை கட்டிக்காக்கும் பி.ஜே.பி. அச்சொல்லாடலின் கீழ் கூட்டணி அமைப்பது பெரும் வேடிக்கை.

**இன்றைய அரசியல் அரங்கில் வலம் வந்துகொண்டு இருக்கும் பெரிய பெரிய அரசியல் கட்சியினர் பயன்படுத்தும் அரசியல் சொல்லாடல்களும், அரசியல் நடவடிக்கைகளும் ஏதோ ஒரு வகையில் இந்துத்துவ (சனாதன) சிந்தனையால் கறைப்பட்டுப் போனவையாகவே உள்ளன.**

அதன் ஓர் அம்சமாகத்தான் மதவாதத்திற்கு எதிராக தங்களை முன்னிருத்தி மார்தட்டிக் கொள்ளும் இடதுசாரிகள் எனப்படுவோர் மேற்கொள்ளும் போராட்டங்களும் இந்துத்துவ சிந்தனைக்குட்பட்டதாகவே இருப்பதைக் காண்கிறோம்.

சமீப ஆண்டுகளில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இவர்கள் மேற்கொண்ட போராட்டங்களை தொகுத்தீர்களேயானால் அவை :சங்கு ஊதும்

படிப்பகம்

www.padippakam.com

## காதல் : சிலகுறிப்புகள்

– டானியல்

அந்தக் காதலனைச் சந்திக்கும் வரைநான் காதல் பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கவில்லை. காதல் என்றாலே இந்திய, தமிழ் திரைப்பட பெற்றோர் மாதிரி முகம் சுளிக்கும் நபராயிருந்தேன் நான்.

அவனை நான் முதன் முதலாக அந்த மாநாட்டில் சந்தித்தேன் அப்போதும் கூட பிற தோழர்கள் அவனது காதல் தோல்வியைச் சுட்டிக்காட்டியே என்னிடம் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

நானும் மனதிற்குள்ளாக 'வெட்டிப்பய' என்று எண்ணியவாறே அவனைப் பார்த்து சிரித்து வைத்தேன்.

அந்த தலித் விடுதலை மாநாட்டிற்கு வந்திருந்த அனைவரும் மேடைக்குப் பேச அழைக்கப்பட்டதைப் போலவே அவனும் அழைக்கப்பட்டான்.

அவனும் தன் சோகக் குரலில் தனக்கு தலித் விடுதலை பற்றியோ அரசியல் பற்றியோ எதுவும் தெரியாதென்று கூறிவிட்டு தான் எவ்வாறு தன் காதலியிடம் இருந்து பிரிக்கப்பட்டான் என்பதை கூறினான்.

சுருக்கம் : அவன் பறையர் வகுப்பைச் சேர்ந்தவன். காதலி கள்ளர் வகுப்பைச் சார்ந்தவள். வழக்கம் போல் இருவரும் உயிருக்குயிராக காதலித்துள்ளனர். அப்பெண் கர்ப்பமுற்றாள். அப்பெண்ணின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அறிந்தால் பெரும் பிரச்சனையாகும் என்பதால் இருவரும் ஊரைவிட்டோடி அவனின் தூரத்து உறவினர் ஒருவர் வீட்டில் தங்கியுள்ளனர். பெண்ணின் உறவினர்கள் கார் போட்டுக் கொண்டு ஊர் ஊராகத் தேடியுள்ளார்கள். கடைசியில் இவர்கள் தங்கியிருந்த ஊருக்கு தேடி வந்தபோது, அடைக்கலம் கொடுத்தவர் அச்சப்பட்டுப் போய் போலீசு ஸ்டேசனுக்குப் போனால் திருமணம் முடித்து விடலாம் என்று சொல்லி அனுப்பிவைத்திருக்கிறார். போலீசு ஸ்டேசனில் இருவரையும் பிரித்து பெண்ணை அவரது வீட்டுக்காரர்களுடன் அனுப்பி வைத்துவிட்டனர். காதலனை ஸ்டேசனுக்கு வெளியே வந்தவுடன் தாக்குவதற்கும் பெண்ணின் உறவினர் காத்திருந்துள்ளனர். இதனைக் கேள்விப்பட்ட தலித் தோழர் ஒருவர் காதலனை பாதுகாப்பாக அழைத்துக் கொண்டு தனது ஊருக்கு சென்று விட்டார். இச்சம்பவம் நடந்த சிலநாட்களில் தான் நமது தோழருடன் அவரும்

படிப்பகம்

www.padippakam.com
மாநாட்டிற்கு வந்துள்ளார்.

நான் தோழர் ஒருவரிடம் அப்பெண்ணின் நிலை இனி என்ன என்று கேட்டேன். அதற்கு அவர் "ஒன்று அப்பெண்ணை அவர்களது ஜாதியைச் சேர்ந்த உறவினனுக்கு மணம் முடித்து விடுவர்" "அல்லது அப் பெண் கர்ப்பிணியாக இருப்பதால் கொன்று விடுவார்கள்" என்றார். மேலும் இதுபோல் நிகழ்வுகள் இங்கு சாதாரணம் என்றும் கூறியதுடன் இந்த முட்டாளால் நமக்கு எல்லாம் அவமானம். அந்தப் பெண் என்ன நினைத்திருப்பாள். தலித் இளைஞர்கள் கையாளாகாதவர்கள், அவர்களைக் காதலித்தால் இப்படித்தான் ஆகும் என்று நினைக்கமாட்டாளா? இவன் ஏன் போலீசுக்குப் போனான். நாமெல்லாம் எதற்கு இருக்கிறோம்? என்று கோபப்பட்டார்.

திரைப்படங்களில் கொழுப்பெடுத்தவர்களது காதல் சேட்டைகளைப் பார்த்துப் பார்த்து வெறுப்பேறிப் போயிருந்த எனக்கு, அல்லது காதல் பற்றிய தமிழ் கற்பிதத்தில் பலியாகிப் போயிருந்த எனக்கு காதல் பற்றிய தலித்திய நோக்கிலான புதிய பார்வை ஒன்று உண்டு என்ற தெளிவை இந்நிகழ்வு ஏற்படுத்தியது. கூடவே ஆணாதிக்க மனோ நிலையில் இருந்து விடுபட்டு பெண் விடுதலை நோக்கு நிலையும் இதனுடன் இணைக்கப்பட வேண்டும் என்ற தெளிவும் நிகழ்வு 2-ன் மூலமாக கிடைத்தது.

## நிகழ்வு : 2

அழகப்பா இஞ்சினியரிங் கல்லூரி முத்தமிழ் மன்றவிழா. சிறப்புரை அ. மார்க்ஸ் வாருங்களேன் சென்று வருவோம் என தோழர் ஒருவர் அழைத்தார், சென்றேன். மாணவர்கள் வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டைகளிலும் மாணவிகள் பட்டுச்சேலைகளிலுமாக நின்று வரவேற்றனர்(முத்தமிழ் விழா அல்லவா?) அரங்கம் நிரம்பி இருந்தது. தலைமை வரவேற்புரை முடிந்து அ. மா. பேசினார். வழக்கம் போலவே தெளிவான அலட்டல் இல்லாத பேச்சு. அன்றைய பேச்சில் அவரது இலக்கு பெண்களாக இருந்தனர். கல்வியில் ஆண்களை விட பெண்களது வளர்ச்சி நன்றாக இருப்பது பற்றி கூறியபோது மாணவிகள் ஆரவாரித்தனர். மாணவர்கள் அமைதி காத்தனர், அடுத்து கல்வி முறை மாற்றம், தமிழ்மொழியில் சாதியக்கறை பற்றியெல்லாம் கூறி முத்தாய்ப்பாக இன்றைய இளைய தலைமுறை சாதிய ஒழிப்பிற்கு தங்களது கடமையைச் செய்யும் முகமாக

காதலிக்கும்படி கேட்டுக்கொண்டு தன் உரையை முடித்தார், அ. மா. "ஆகவே காதலியுங்கள், காதலியுங்கள்", என்ற போது மாணவர்கள் ஆரவாரித்தனர், மாணவிகள் அமைதிகாத்தனர்-ஏன்?

படிப்பகம்

www.padippakam.com

## நிகழ்வு - 3

ஏதோ ஒருநாள் சமீபத்திய தினசரியில் படித்த செய்தி. தாய்லாந்து நாட்டில் நிகழ்ந்ததாக நினைவு. தனது காதலனைக் குத்தி கொலை செய்த பெண் அதன் காரணத்தை சொல்லும்போது ' நான் இதுவரை உடலுறவு கொண்ட என் காதலர்கள் எல்லோருமே ஆணுரை அணிந்திருந்தனர். ஆனால் நான் தாக்கிய இவன் ஆணுரை அணியாமல் என்னுடன் உடலுறவு கொண்ட காரணத்தினால் எனக்கு எய்ட்ஸை பரப்பி விட்டான்' என்று சந்தேகித்ததின் பேரில் கத்தியால் குத்தியதாக கோர்ட்டில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இச்செய்தியை படிக்கும் போது 'காதல் வெற்றி x காதல் தோல்வி' பற்றிய இந்திய சூழலில் நிலவும் சிந்தனை மீது கேள்வி எழுந்தது.

காதலித்தவர்கள் திருமணம் செய்து கொண்டால் அந்த காதலை வெற்றியடைந்த காதல் என்று கூறுகிறார்கள்.

அவ்வாறு இல்லாமல் சாதி, மதம் அல்லது பணம் போன்ற ஏதோ ஒரு காரணத்தினால் தான் காதலர்கள் பிரிந்து விட்டால் காதல் தோற்று விட்டதாக கூறுவர்.

இங்கு காதலின் இலக்கு திருமணமாக இருக்கிறது. ஆக திருமணத்தை நோக்கமாகக் கொண்டு அதற்காக ஒரு ஆணும் பெண்ணும் ஏற்படுத்திக் கொள்ளும் உறவு காதல் எனப்படுகிறது.

எதற்காக திருமணம்? அந்த ஆணும் பெண்ணும் **SEX** உறவு கொள்வதற்கான அனுமதி வழங்கும் சடங்கு திருமணம். இந்த பாலுறவு இல்லாமல் ஒரு ஆணும் பெண்ணும் சிரித்துபேசி பழகினால் அதன் பெயர் நட்பு என்று குறிப்பிடப்படுகிறது. ஆக, இங்கு காதலில் **SEX** (பாலுறவு) முக்கிய இடம் வகிக்கிறது.

சாதாரணமாக 13 வயதில் இருந்து ஆண், பெண் இருவரது உடலும் பாலுறவிற்கு தயாராகி விடுகிறது. ஆனால் நமது சமூகத்தில் பாலுறவும், மதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. உணவு உண்பதில் கூட இன்னார் இன்ன உணவை உண்ணலாம் என இந்து மதம் சட்டதிட்டங்கள் வகுத்துள்ளதை போலவே பாலுறவையும் சாதி, மத, வயது, ராசி, பொருத்தம் என பல்வேறு கருத்தியல்களை கொண்டு கட்டுப்படுத்தியுள்ளது.

இவ்வாறு, கட்டுப்படுத்தப்பட்டுள்ள உடலியல் தேவையின் காரணமாக 13 வயதிலிருந்து 20 வயது வரையிலான ஆண், பெண் இருவரது சிந்தனை முழுவதும் பாலியல் தேடலில் தீவிரமாக ஈடுபடுகிறது.

படிப்பகம்

தனக்கு வரப்போகும் கணவன் பற்றிய ஏக்கத்தில் பெண் தவம் இருப்பவளாக தன் கற்பை சேமித்து வைத்திருப்பவளாக (என்ன ஒரு அபத்தம்) கற்பிக்கப்படுகிறாள். இந்த இடத்தில் முருகனுக்காக வள்ளி காத்திருந்தாள் என்ற கற்பிதத்தையும், சிவனுக்காக சக்தி காத்திருந்தாள் என்ற கதையாடலையும் நினைத்து பார்க்கலாம்.

www.padippakam.com

இன்றைய இளைஞன் தனக்கான பெண்ணை அடையும் பொருட்டு ஆடை அலங்காரம் வேலை போன்றவற்றை எல்லாம் தேடுகின்றான். இப்படிப்பட்ட ஆணும் பெண்ணும் சந்திக்கும் சமயம் காதல் வயப்படுகின்றனர்.

இந்தக் காலக்கட்டத்தில் உடலுறவு மட்டும்கொண்டு விடாமல் திருமணத்திற்கு அதாவது சமூக அங்கீகாரத்திற்குப் பிறகு உடலுறவு கொள்வார்களேயானால் அது புனிதக் காதல் எனப்படுகிறது. ஒருவேளை திருமணத்திற்கு முன்னதாக உடலுறவு கொண்டு பெண் கருவுற்றால் எனில் பிராய்ச்சித்தமாக அவளையே அந்த ஆண் மணம் முடித்துகொண்டாலும் அவர்களது காதல் மன்னித்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால் திருமணத்திற்கு பின் தங்களது குடும்ப உறவுகளுக்கு வெளியே தங்களது பாலியல் உறவை ஆணோ, பெண்ணோ மேற்கொள்வார்களேயானால் அது 'கள்ளக்காதல்' என்றழைக்கப்படுகிறது. இந்தக்கள்ளக்காதல் என்ற சொல்லாடல் ஆணாதிக்க நோக்கு நிலையில் இருந்தே கட்டமைக்கப்படுகிறது. ஏனெனில் ஒரு ஆண் தன்குடும்பத்திற்கு வெளியே பணம் செலவழித்து பாலுறவு பெண் தொழிலாளியிடம் சென்று வந்துவிட முடியும். அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், அது கள்ளக்காதல் என்று அழைக்கப்படுவதுமில்லை. ஆனால் குடும்பத்திற்கு வெளியே ஒரு பெண் இவ்வாறு சென்றுவர ஆண் பாலுறவு தொழிலாளர்கள் என்போர் இங்கு இல்லை.

ஆகவே, கள்ளக்காதலன் என்ற நிரந்தரமான ஒரு ஆணை சார்ந்தே தன் பாலுறவு தேவையை பூர்த்தி செய்து கொள்ளவேண்டிய நிலையில் ஒரு குடுப்பப்பெண் இங்கு உள்ளாள்.

ஐரோப்பாவில் நிலவும் திருமணத்துடன் இணைக்கப்படாத பாலுறவும் 'கற்பு' எனும் கற்பிதம் செல்வாக்குச் செலுத்தாத நிலமையும் சிந்திக்கத்தகுந்தன.

**'Love' – 'காதல்' – சொல்லாடல் குறித்து :** Love என்ற சொல்லுக்கு அதன் தாயகமான ஐரோப்பாவில் வழங்கும் பொருள் நமது தமிழ் சூழலில் இல்லை. Love என்ற சொல் மேலை நாடுகளில் தாய்க்கும், மகனுக்கும், மகளுக்கும் அல்லது தந்தை மகன், மகள், அண்ணன் தங்கை என்ற அனைத்து உறவுகளுக்கும் இடையில் கையாளப்படுகிறது.

ஆனால் இங்கு காதல் (Love) என்பதற்கு ஓர் அர்த்தமும் அன்பு

படிப்பகம்

என்பதற்கு வேறு ஒரு அர்த்தமும் வழக்கத்தில் உள்ளது. இயற்கைக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் பிற உயிரினங்களுக்கும் இடைப்பட்ட உறவையும் கூட Love என்ற பதத்தில் ஐரோப்பாவில் காண்கின்றனர். இந்தியாவில் பாலியல் உறவு கொள்ளக்கூடிய ஆண், பெண் இருவருக்கும் இடையிலான உறவை மட்டுமே Love (காதல்) என்பது குறிக்கிறது.

www.padippakam.com

பிற உறவுகள் அன்பால் அய்க்கியப்பட்டிருப்தாக காட்டப்படுகின்றன. மனிதன் பிற உயிரினங்கள் மீது காட்டும் பரிவை 'ஜீவகாருண்யம்' என்ற பதத்தால் இங்கு வேறுபடுத்துகின்றனர்.

இவற்றை எல்லாம் வைத்து பார்க்கும்போது Love க்கு நிகரான பொருளில் இங்கு சொல் எதுவுமில்லை. ஐரோப்பிய 'Love'-வும் 'தமிழ் காதலும்' வேறு வேறு. இன்னும் சரியாகச் சொல்வதானால் முதன் முதலில் காதல் தோன்றிய போது என்ன பொருளில் காணப்பட்டதோ அதே பொருளில் ஏறக்குறைய இன்றும் காணப்படுகிறது.* ஆனால் ஒரு வேறுபாடு அன்றைய காதலை இன்று கள்ளக்காதல் என்றும் கற்பு நிலைக் கோட்பாட்டிற்கு உட்பட்ட காதலை நல்ல (புனித) காதல் என்றும் குறிப்பிடுகின்றனர்.

தொகுப்பாக : **'காதல்'** இல்லையேல் சாதல் என்ற கோட்பாடு உயர்த்திப் பிடிக்கப்படும். இன்றைய சூழலில் காதல் கோட்டை, காதல் தேசம், காதலே நிம்மதி, காதலன், காதலா காதலா, காதலுக்கு மரியாதை எனத் திரைப்படங்களும் காதலை வைத்து இளைஞர்களை தன்பக்கம் இழுத்துக் கொண்டிருக்கும் சூழலில் காதல் பற்றிய நல்ல புரிதலை ஏற்படுத்தும் முகமாக இங்கு சில குறிப்புகளை முன் வைத்துள்ளளோம். தொடர்ந்து தோழர்கள் எழுதியனுப்பும் காதல் தொடர்பான கட்டுரைகள் பிரசுரமாகும். நீங்களும் எழுதுங்கள் தோழர்களே!

---

* ( ஆணுக்குப் பெண் அடிமையான பின் குடும்பம் தோன்றிய பின் ஆண் பாலியல் சுதந்திரத்துடனும் பெண் பாலியல் சுதந்திரம் மறுக்கப்பட்டும் கற்புநிலை கோட்பாடு வழக்கத்திற்கு வந்தபோது பெண் தன் கணவன் தவிர்த்த பிற ஆணுடன் தொடர்பு கொண்டதை 'காதல்' என்ற பதத்தால் குறிப்பிட்டதாக அறிகிறோம்).



படிப்பகம்

www.padippakam.com

தலையை இழந்தால் முண்டம்
தலைவனை இழந்தால் - விதவை
சிந்தயை இழந்தால் - பைத்தியம்
நாட்டை இழந்தால் - அகதி
உடலுறுப்பை இழந்தால் - ஊனம்
உணர்வை இழந்தால் - சடம்
உயிரை இழந்தால் - சடலம்
குரலை இழந்தால் - ஊமை
உயிரினும் மேலான - தாய்மொழியை இழந்தால் ?
தமிழா உன் பெயர் என்ன?



## கருத்துப்பட விமர்சனம்

- நசீம்

இந்தப் படம் சிற்றிதழ் செய்தி ஆசிரியர் திரு. பொள்ளாச்சி நசன் தயாரித்து பயன்படுத்திவரும் உள் நாட்டுத் தபாலின் பின்பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இது அவர் தனது தாய் மொழிப்பற்றை வெளிப்படுத்தும் விதமாகவும், தாய்மொழி மேன்மையை பிறர்க்கும் உணர்த்தும் விதமாகவும் மேற்கொண்ட முயற்சி

பரப்பப்படும் கருத்தாக இருப்பதால் அக்கருத்தின் மறுபக்கத்தை உடைத்துக் காண்பிப்பது ஒடுக்கப்பட்டோரின் நலனுக்கானதும் இன்று அவசியமானதும் என நினைக்கிறோம்.

முண்டம் = விதவை = பைத்தியம் = அகதி = ஊனம் = சடம் = சடலம் (பிணம்) = ஊமை என்ற சொற்கள் இழக்க கூடாததை இழக்கும் போது சூட்டப்படும் 'அவ'ப்பெயர்கள் என்ற இன்றைய சமூக நிலையில் இப்பெயர்களுக்கு நிகரான இழிவான ஒரு பெயர் தாய்மொழியை இழப்பவருக்கும் உண்டு என அச்சமூட்டும் வகையில் இக்கருத்துப்படம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பெயர் சூட்டலை அதாவது இழிவு படுத்துதலை இருவிதமாக பார்க்கவேண்டியுள்ளது. ஒன்று இழத்தலுக்கான காரணிகளை விட்டுவிட்டு இழந்தோர்களை இழிவுபடுத்தும் போக்கு. இரண்டாவது இழப்பை முன்னிட்டு சூட்டப்படும் பெயருள் ஒளிந்திருக்கும் மோசமான கருத்து. உதாரணமாக விதவை என்பதை எடுத்துக்கொள்ளுங்கள். கணவன் இறந்தால் மனைவியை குறிக்கும் சொல்லாக 'விதவை' என்ற பதம் படைக்கப்பட்டுள்ளது இச்சொல் நமது நாட்டில் ஓர் அவச்சொல்லாக கையாளப்படுகிறது. இதே சமயம் மனைவியை இழந்த கணவனுக்கு இது


படிப்பகம்

போல ஒரு சொல் (பெயர்) கிடையாது என்பதையும் இணைத்துப் பார்க்கவேண்டும்.
www.padippakam.com

கணவன் இறந்த பின் அவன் மனைவி வாழத்தகுதி அற்றவள், மதிக்கப்பட கூடாதவள் நல்ல காரியங்களில் பங்கேற்கக் கூடாதவள் என்ற கருத்தியல்கள் எல்லாம் இந்த 'விதவை' என்ற வார்த்தைக்குப் பின் மறைந்துள்ளது. இந்த சொல் இன்றைய சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது.

இது போலவே முண்டம் முதல் ஊனம் வரையிலான சொற்கள் இங்கு நடைமுறையில் இழிவுபடுத்தும் விதமாக பயன்படுத்தப்படுவதை நாம் அன்றாடம் காண்கிறோம்.

இந்த இழிவுபடுத்துதலை ஏற்றுக் கொண்டே இதுபோல் இழிவுபடுத்தும் ஓர் சொல் தாய்மொழி இழந்தோர்க்கும் கிட்டும் என தமிழன்' எச்சரிக்கிறார்.

மேற்கானும் சொற்கள் (முண்டம் முதல் ஊமை வரை) பயன்படுத்தப் படுவதும், படைக்கப்பட்டதும் எவ்வளது நியாயமற்றதும் ஆதிக்கத்தன்மை கொண்டதுமாகுமோ அதுபோலவே தாய்மொழி இழந்தோருக்கு பெயரிடுதலும் முட்டாள்தனமானதும் அநியாயமானதுமாகும்

இன்னும் சற்று விளங்கிக் கொள்ள (பிணம்) சடலம் என்ற சொல்லை பரிசீலியுங்கள். மரணம் இயல்பானது ஆனதால் அதனை இயல்பானதாக ஏற்றுக்கொள்ளும் அறிவு வளர்ச்சியை பெறுவதனை இங்குள்ள மதங்களும் மூடத்தனங்களும் தடுத்து வருகின்றன. இயல்பான மரணத்தையும் கூட தண்டனையாகப் பார்க்கும் அல்லது புண்ணியமாகப் பார்க்கும் போக்கு இன்றும் நிலவுகிறது.

உயிரற்ற உடலைக் கண்டு அஞ்சும் போக்கும் அந்த அச்சத்தின் ஊடாக வணங்கும் போக்கும் நிலவுகிறது. இதன் காரணமாகவே பல்வேறு சடங்குகளும் இன்றும் கடைப்பிடிக்கப்படுவதை காணமுடிகிறது.உயிர் பிரிந்த உடல் பற்றிய அடிப்படையான அறிவு புகட்டப்பட்டிருந்தால் அந்த உடலை காலாகாலத்தில் அழிப்பதற்கு மக்கள் பழகிஇருப்பர். மாறாக பிற்போக்கு தனங்கள் இன்னும் ஒழிக்கப்படாததால் இறப்பு வீட்டில் இறந்தவரின் உடலை வைத்துக்கொண்டு பல்வேறு கூத்துக்கள் அடிக்கப்படுவதை நாம் இன்றும் கண்டுவருகிறோம்.

இந்த பிற்போக்கு சிந்தனைக்கு பலியாகிப் போனவராக தமிழன் (கருத்துப்பட ஓவியர்) (மற்றும் நசன் ) இருப்பதாலேயே 'சடலம்' என்பதனை இழிவான ஒன்றாக கருதுகின்றனர்.

எவ்வாறு உயிரற்ற உடலை வணக்கத்திற்கு உரியதாக கருதுவது


படிப்பகம்

மூடத்தனமானதோ அது போலவே இழிவாக கருதுவதும் மூடத்தனமானதே. சுகாதாரம் என்றவகையில் சடலத்தை அனுகுவது என்பது விஞ்ஞானப்பூர்வமானது. ஆனால் இழிவாகப் பார்ப்பது என்பது ஆதிக்கத்தன்மை கொண்டது. இத்தகைய பார்வையே பிணத்தை எரிப்பவரை, பிணத்திற்கு காரியங்கள் செய்பவர்களை தனிசாதியாக பிரித்து வைத்திருக்கும் இந்துத்துவத்தின் வெளிப்பாடாகும். இந்த இந்துத்துவம்தான் சடலத்திற்கு பல்வேறு சடங்குகளை செய்யவேண்டும் என நிர்பந்திக்கிறது இது எங்கிருந்து பிறக்கிறது. உயிரை, சிந்தனையை, உணர்வை, முழுமையை விட குறிப்பானதை உயர்வாக – அடிப்படையாகப் பார்க்கும் பார்வையிலிருந்து வருகிறது.

www.padippakam.com

நாம் இதற்கெதிராக எளிமைபடுத்தி இவ்வாறு கேட்கலாம். தலையை இழந்தால் முண்டம் என இழிவுபடுத்துகிறோம். முண்டத்தை இழந்தால் தலைக்கு என்ன மதிப்பிருக்கும்? உடலற்ற உயிர் எங்கிருக்கிறது? சடம் (பொருள்) அற்ற உணர்வு ஏது? தமிழன் அற்ற தமிழ் மொழிக்கு என்ன பயன்? என்று எதிர்மறையாக கேட்கவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்

அடுத்து ஓர் முக்கியமான பிரச்சனைக்குள் நமது பார்வையை நுழைக்க வேண்டியுள்ளது. தாய்மொழி (தமிழ்) பற்றிக்கூறுகிறார்களே. அந்த தமிழ் மொழியின் நிலை என்ன? புனிதமானதாக நம் முன் காட்டப்படுகின்ற தமிழின் உண்மைத் தன்மை தான் என்ன?

இங்கு தூய தமிழ், தனித் தமிழ் என்ற பெயரால் பிறமொழி கலப்புச்சொற்கள், எழுத்துக்கள் நீக்கப்பட்டு தூய்மைப்படுத்தும் செயல் இன்று தமிழறிஞர்கள் என்று சொல்லப்படுபவர்களால் மேற்கொள்ளப்படுகிறது

உண்மையில் தமிழ்மொழி தூய்மைப்படுத்தப்படவேண்டியதே அது எத்தகைய தூய்மை எந்தக்கறைகள் போக்கப்பட வேண்டும்?.

பிற மொழிச் சொற்கள், எழுத்துகளுக்கு முன்பாக உள்ளடக்கம் அதாவது பிற்போக்கு கருத்தியல்களை குறிக்கும் சொல்லாடல்கள் போக்கப்படவேண்டாமா?

சாதி, தீட்டு, விதவை, கற்பு, பெண்மை, ஆண்மை........ போன்ற சொற்கள் அல்லாதொழிய வேண்டாமா?

நமக்கு தெரியும் இது போன்ற சொற்கள் பயன்படுவதற்கான புறநிலையாக சமூக அமைப்பு இருக்கிறது. மக்கள் சாதியாக பிரித்து வைக்கப்பட்டுள்ளனர். அதனை ஒட்டி தொட்டால் தீட்டு எனும் கொடுமையும் அது போலவே மாதவிடாய் காலப்பெண்ணை தொட்டால் தீட்டு எனும் கொடுமையும் கற்பிக்கப்பட்டு வருகிறது.

இயற்கையான உடலியல் வெளிப்பாட்டை தீட்டு என்றும்,


படிப்பகம்

www.padippakam.com

விஞ்ஞானத்திற்கு புறம்பான கீழ்-மேல் சாதி என மனிதர்களை பிரித்து வைத்து தீண்டாமை எனும் சொல்லாடலுக்கு பயன் ஏற்படுத்தி வைத்திருப்பதை அல்லவா தமிழ்மேன்மை விரும்புவோர் முதலில் எதிர்க்க வேண்டும் உண்மையான தமிழ்வளர்ச்சி என்பது இது போன்ற மூடச்சொற்கள் நீக்கப்படுவதில் அல்லவா உள்ளது.

மொழிவளர்ச்சி என்பது தனியான அல்லது சுயச்சையான ஒன்றல்ல அது பேசப்படும் மக்கள் மேற்கொண்டுள்ள சமூக உறவுடனும் உற்பத்தியுடனும் தொடர்புடையது.

இன்று தமிழ் நசிந்துள்ளதற்கும். ஆங்கிலம் மேலாதிக்கம் செலுத்துவதற்கும் காரணங்கள் இல்லாமல் இல்லை. இதனை புரிந்து கொள்வதற்கு நம்மீது ஆதிக்கம் செலுத்தும் ஆங்கிலத்தின் பலத்திற்கான காரணத்தை புரிந்து கொள்வது உதவும்

நமது தமிழைவிட ஆங்கிலமானது மிகவும் பின்னாளில் (15-ம் நூற்றாண்டில் ) வளர்ந்தது. ஆனால் இன்று அம்மொழி உலகின் பல்வேறு மொழிகளின் மீதும் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கிறது.

காரணம் ஆங்கிலத்தை தாய்மொழியாக கொண்ட நாட்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சியும் முதலாளித்துவ வளர்ச்சியுமே காரணமாகும். இந்த முதலாளிய உற்பத்திப் பொருட்களை விற்பதற்கும், மூலப்பொருட்களை வாங்கிச் செல்வதற்குமான வணிகர் (கிழக்கிந்தியக் கம்பெனி) களாகவே ஆங்கிலேயர் இங்கு வந்தனர் என்பது கவணத்தில் கொள்ளப்பட வேண்டும்

இதன் எதிர்மறையாக இத்தகைய (முதலாளிய) தொழிற்புரட்சி நடைபெறாத பின்தங்கிய நாடுகள் அவர்களுக்கு அடிமையாயின.

ஆங்கிலேயர்கள் கொண்டுவந்த பொருட்களை வாங்கி உபயோகிக்கும் போது அவர்களது மொழியையும் சுவிகரித்துக் கொள்ள வேண்டியிருந்தது (எ-டு டீ முதல் சிகரட் வரை)

ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பு தமிழ் என்ன அடிப்படையில் இருந்ததோ அதனோடு புதிய பல ஆங்கிலச் சொற்களும் சேர்ந்து கொண்டது ஆனால் பழைய மூடச்சொற்கள் ஏதும் மறையவில்லை. ஏனெனில் சமூகத்தில் நிலவிய பிற்போக்குத் தனங்கள் மறையவில்லையல்லவா?

இப்போது என்ன செய்கிறார்கள் தமிழ் புலவர்கள் வந்து புகுந்துள்ள ஆங்கில உற்பத்திப் பொருட்களுக்கு தூய தமிழில் பெயர் வைத்துக் கொதண்டிருக்கிறார்கள்

கொடுமைகளிலெல்லாம் பெரிய கொடுமை என்ன தெரியுமா? எவர்கள் மொழிவளர்ச்சிக்குத் தேவையான தொழில் வளர்ச்சியை தடுத்துக்

www.padippakam.com

கொண்டும் பிற்போக்கு தனங்களை கட்டிக்காத்தும் வருகிறார்களோ அவர்களே மொழிவளர்ச்சிக்கென்று பாடுபடுவதாக காட்டிக்கொள்வதுதான் ஒருபுறம் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளுடன் கூட்டு வைத்து தொழில் நுட்பங்களையும் எந்திரங்களையும் இறக்குமதி செய்கிறார்கள் அதற்கேற்றவாறு நவீன (ஆங்கில வழி) கல்விமுறைகளையும் கற்றுகொடுத்துக் கொண்டே மறுபுறம் தமிழ் என்றும் தமிழன் என்றும் தம்பட்டம் அடிக்கிறார்கள்

கம்ப்யூட்டர் இறக்குமதியில் அரசு கையெழுத்திடும் போது தமிழறிஞர்கள் கணினி என்றும் ஹுண்டாய் கார் தொழிலுக்கு ஒப்பந்தம் போடும் போது மகிழுந்து என்று பெயர் சூட்டியும் அதில் சொகுசாக பயணம் செய்கிறார்கள் .

ஆனால் இதனையெல்லாம் கவனத்தில் கொள்ளாத கருத்துப்படம் தாய்மொழி வளர்ச்சிக்கு உண்மையில் தடையாக இருப்பவை எவை என்பது பற்றிய புரிதலின்றி ஆட்சியாளர்களின் திட்டங்களுக்கு பலியாகிப் போயுள்ள மக்களை பார்த்து மிரட்டுகிறது. அதுவும் பிற்போக்கு தனமான மூடச்சிந்தனையின் வழிநின்று முண்டம், விதவை என்று திட்டுகிறது

இவ்வாறு ஆதிக்கம் செய்வோரின் ஆயுதமாக நின்று மொழி செயலாற்றும் போது அம்மொழி மீது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வெறுப்புதான் வரும். இந்த மொழியை இழப்பது பற்றிய கவலையும் வரப்போவதில்லை .

எனவே தமிழ் மொழிவளர வேண்டும் என விரும்புவோர் முதலில் தமிழில் உள்ள கறையை போக்கி அதாவது ஆதிக்கம் செய்வோரின் கைகளில் இருக்கும் அழகு தமிழைப் பறித்து அறிவு தமிழாக மாற்றி மக்களின் வாழ்வுக்கும் வளத்திற்கும் உதவும்படி செய்யுங்கள்.

அதற்கு தடையாக வருகின்ற பிற்போக்காளர்களை எதிர்த்து போராடுங்கள். தமிழ் வளர தமிழன் வளர வேண்டும். தமிழன் வளர்ச்சி என்பது தமிழன் சாதியாக பிரிந்துள்ளவரை அதாவது ஒடுக்குபவனை தமிழனுக்குள் வைத்திருக்கும் வரை சாத்தியமில்லை. இந்த ஒடுக்குமுறையாளர்கள் தானே இதுவரை தமிழ் மக்களை சுய சிந்தனையற்றவர்களாக ஆக்கிவைத்தும் வளர்ந்த நாடுகளுக்கு அடிமைப்படுத்தி தங்களை மட்டும் வளர்த்துக் கொண்டு அதுவே தமிழினத்தின் வளர்ச்சி என்று கூறிவந்தனர். இதனை மறைப்பதற்கே தமிழ்மொழிப்பற்றை மூடுதிரையாகப் பயன்படுத்திவந்தனர். இத்தகைய வேறுபாடுகளை எல்லாம் காணாமல் மொட்டையாக தமிழ், தமிழன், தாய்மொழிக் கல்வி என்று பேசுவது எப்படி சரி? இதற்கெதிராக நாம் கேட்போம் எத்தகைய தமிழ்? எத்தகைய கல்வி? யார் தமிழன்?

www.padippakam.com

## வரப்பெற்றோம்

எக்ஸில் 1,3,4,5,6 Chez R. Inpavalli, 94, Ruede Lachapalle 75018, Paris France

உறவு 1,23,4, கா. சே. பாலசுப்பிரமணியன், 6/5, கீழக்கொரட்டையர் வீடு, காரைக்குடி - 630 001.

தன் முன்னேற்றம் நம் பிறப்புரிமை 2, பா. ராமமூர்த்தி 1/429, மலைநோக்கும் குடியிருப்பு, ஜி.எஸ்.டி சாலை, வண்டலூர் ரயிலடி, சென்னை - 48.

சுந்தரசுகன் 144, அம்மா வீடு, C-46, இரண்டாம் தெரு, நகராட்சிக் குடியிருப்பு தஞ்சாவூர் - 613 007.

சோலைக்குயில் கவிமுரசு தென்கீரனூர் அஞ்சல், கல்லக்குறிச்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 606 202.

இலட்சியப்போராளி ஜீவா,50,ஜேம்ஸ் நகர், கருப்பாயூரணி, மதுரை - 20

தேடல் எஸ். முருகன், 70, தெற்கு ரத்தின சபாபதிபுரம் தெரு, திருநகரம் அருப்புக்கோட்டை - 626 101.

புனர் 39.A Dr. சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை - 94

புதுயுகம். 2, இளங்கோ தெரு, அய்யப்ப நகர், திருச்சி - 620021

ஏழைதாசன் - 26. அடப்பன் வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை - 622 002.

நாளை விடியும் பி. இர. அரசெழிலன், 1/120, ஆலங்குடி சாலை, அரிமளம் (வழி), சே. குளவாய்ப்பட்டி, புதுக்கோட்டை - 622 201.

பயணம் PK. Subramani. L - 56. K.V. Temple Street, Sultan Pet, Banglore - 560 053.

முங்காரி, புலமைப் பண்ணை, சுகர்கேன் அஞ்சல் கோவை - 641 007.

சமர், 24, SAMAR - 81 RVE DE Colombes, 92600 Asnieres, Surseine, France.

சிற்றிதழ் செய்தி - பொள்ளாச்சி நசன், 1. சம்பத் நகர், சூளேஸ்வரன் பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642 006.

---



படிப்பகம்